**முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், இராமநாதபுரம்.**

SC.No. 47/2023

நாள் 02.06.2025

( 2 முதல் 4 எதிரிகள் ஆஜர். )

(1 வது எதிரி இறந்துவிட்டார்)

அ.த.சா. 5 திரு. பழனி என்பவரை மீண்டும் அழைத்து விசாரிக்க மனு தாக்கல் செய்து கு.ப.மனு எண்.02/2025 16.04.2025 ம் தேதி அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி இன்று மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

02.10.2012 ம் தேதி பரமக்குடி நகர் காவல் நிலையத்தில் இரவு 10.00 மணி முதல் பணியில் இருந்தேன். இரவு 10.00 மணிக்கு முன்பு நான் காவல் நிலையத்திற்கு வரவில்லை என்றால் 09.30 மணிக்கு இரவு ரோந்து ஆரம்பிக்கப்படுகிறது என்று தகவல் சொல்லிவிட்டு ரோந்துப்பணிக்கு சென்றுவிட்டேன். என்னை அன்றைய தினம் ரோந்து பணிக்கு பணித்தது யார் என்றால் DSP அலுவலத்தில் இருந்து பணித்தார்கள். நான் காவல் நிலையத்திற்கு வந்து ரோந்து பணிக்கு செல்லும்போது பொதுநாட்குறிப்பேட்டில் பதிவிடவேண்டும் என்றால் சரிதான். நான் காவல் நிலையத்திலிருந்து வெளியிடங்களுக்கு பணிக்கு செல்லும்போது பாக்கெட் டைரி பராமரிக்க வேண்டும் என்றால் சரிதான். அந்த பாக்கெட்டைரியை நான் புலன்விசாரணை அதிகாரியிடம் ஒப்படைக்க வேண்டும் என்றால் சரிதான்.

இந்த வழக்கு சம்மந்தமாக என்னை CBCID காவல் ஆய்வாளர் 2018 ம் வருடம் விசாரித்தார். 03.10.2012 ம் தேதி பரமக்குடி காவல் நிலையத்தில் கொடுத்த புகாரை நான் காவல் நிலையத்தில் வைத்துத்தான் எழுதினேன். புகார் சம்மந்தமாக என்னை ரோந்து பணிக்கு பணித்த காவல்

துணைக்கண்காணிப்பாளரிடம் தகவல் தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன். நான் புகார் கொடுத்த சமயத்தில் காவல் துணைக்கண்காணிப்பாளர் காவல் நிலையத்திற்கு வந்துவிட்டார். இந்த வழக்கு சம்மந்தமாக துறைரீதியான விசாரணையில் காவல் துணைக்கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார். அவ்வாறு புகார் கொடுத்த சமயத்தில் வந்த காவல் துணைக்கண்காணிப்பாளர் என்னை விசாரித்து புகார் சம்மந்தமாக விவரம் கேட்டு தெரிந்து கொண்டார் என்றால் சரிதான்.

முதல் தகவல் அறிக்கை சம்மந்தமாக பொதுநாட்குறிப்பில் பதிவு செய்ய வேண்டும் என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரானது குற்ற எண். 427/2012 ஆக பதிவு செய்யப்பட்டது. அதற்கு முன்பு குற்ற எண். 426/2012 இதச பிரிவு 307 கீழ் இறந்துபோன வெங்கடேசன் மீது காவல் நிலைய ஆய்வாளர் வழக்கு பதிவு செய்திருந்தார் என்றால் சரிதான். நான் 03.10.2012ம் தேதி பொதுநாட்குறிப்பு பொறுப்பில் காலை 09.30 மணி முதல் பணியில் இருந்தேன். கொலை முயற்சி 307 வழக்கை ஆய்வாளர்நிலையில் உள்ள அதிகாரி புலன் விசாரணை செய்யலாம் என்றால் சரிதான். குற்ற எண். 426/2012 இதச 307 வழக்கின் புலன் விசாரணை அதிகாரி ஆய்வாளர் திரு.சுபாஷ் என்றால் சரிதான்.

நான் கொடுத்த புகாரில், "ஆய்வாளர் வசம் இருந்த எதிரிக்கு உடல்நிலை சோர்வாக காணப்படுகிறது என்றும்," என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி நபருக்கு உடல்நிலை சோர்வாக காணப்படுகிறது என்ற தகவலை எனக்கு யார் கொடுத்தார் என்றால் ஆய்வாளர் சொன்னார். எதன் மூலமாக ஆய்வாளர் எனக்கு தகவல் சொன்னார் என்றால் போன் மூலம் தகவல் சொன்னார். நமுணாவில் போலிசாரை கத்தியால் குத்த முற்பட்ட போது, லத்தியால் தாக்கியதில் கால்களில் காயம் ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்காக சிகிச்சைக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

வெங்கடேசன் பிடிக்க முயன்ற போது அவர் இருசக்கர வாகனத்தை அதிவேகமாக ஓட்டிசென்று நிலை தடுமாறி கீழே விழுந்ததில் அவருக்கு உள்காயங்கள் ஏற்பட்டன என்றால் அது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. நான் வெங்கடேசனை காந்திசிலை அருகில் பார்த்த போது அவர் என்ன உடை அணிந்திருந்தார் என்றால் தற்போது ஞாபகம் இல்லை.

நான் கொடுத்த புகாரில் இறந்துபோன வெங்கடேசனை எமனேஸ்வரம் காவல்நிலையத்தில் வைத்து விசாரித்ததாகவோ, குற்றப்பிரிவு போலிசார் அவரை தாக்கியதாகவோ நான் எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பரமக்குடி நீதித்துறை நடுவர் 26.10.2012 ம் தேதி என்னை காவல்நிலையத்தில் வெங்கடேசன் இறந்துபோனது சம்மந்தமாக விசாரித்தார் என்றால் சரிதான்.

நான் எனது முதன்மை விசாரணை சாட்சியத்தில் " 03.45 மணியளவில் தேசிய நெடுஞ்சாலை ரோந்து வாகனத்தில் ஒருவரை பிடித்து உட்கார வைத்திருந்தார், அவரை பற்றி விசாரித்தபோது அவர் பெயர் வெங்கடேசன் என்றும் அவர் மதுரையை சேர்ந்தவர் என்றும், அப்போது அவர் நல்ல நிலையில் இருந்தார்" என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். இந்த விவரத்தை பரமக்குடி நீதித்துறை நடுவர் என்னை விசாரித்தபோது சொல்லவில்லை என்றால் சரிதான். பரமக்குடி நீதித்துறை நடுவர் என்னை விசாரித்தபோது இறந்துபோன வெங்கடேசனை நான் சம்பவ நாளன்று நேரடியாக பார்த்தேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான்.

நான் எனது முதன்மை விசாரணையில் "வெங்கடேசன் எமனேஸ்வரம் காவல் நிலையத்தில் விசாரணைக்கு இருந்த போது, குற்றப்பிரிவு போலிசார் லத்தியால் தாக்கியதால் இறப்பு ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன்" என்ற விவரத்தை பரமக்குடி நீதித்துறை நடுவர் என்னை விசாரித்தபோது சொல்லவில்லை என்றால் சரிதான்.

நமுணா, புகார் ஆகியவை காலதாமதமாக பின்னிட்டு வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் 03.10.2012 ம் தேதிக்கு முதல்நாள் இரவு பரமக்குடி காக்காதோப்பு என்ற இடத்தில் மேற்படி வெங்கடேசனுக்கும் வேறொரு நபருக்கும் தகராறு ஏற்பட்டு, அதில் வெங்கடேசனுக்கு உடலில் காயங்கள் ஏற்பட்டன என்றால் அது எனக்குத் தெரியாது. அந்த விவரம் எனக்குத் தெரியும் என்றும், வழக்கிற்காக அதை மறைத்து தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 03.10.2012 ம் தேதி போலிசார் துறத்தியபோது வெங்கடேசன் இருசக்கர வாகனத்தில் அதிவேகமாக சென்று நிலை தடுமாறி கீழே விழுந்ததில், தலையில் காயமும், தற்காப்பிற்காக தன்னை குத்த வந்த வெங்கடேசனை சார்பு ஆய்வாளர் முனியசாமி லத்தியால் தாக்கியதில் காயங்களும் ஏற்பட்டிருந்தன என்றும், இந்த விவரங்களை வெங்கடேசனை நான் நேரில் பார்க்காததால் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் நான் அவரை பார்த்தேன். ஆனால் அவருக்கு காயங்கள் இருந்தது எனக்கு தெரியாது. எனது உயர் அதிகாரிகளின் அறிவுறுத்தலின் பேரில், பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

ஒப்பம்/ஏ.கே.மெக்பூப் அலிகான்,
முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .